யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 மாசி 14 செவ்வாய்க்கிழமை (25-02-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 90

## வானூர்திகள் இழக்கப்பட்டதை அடுத்து

# விமானப் படை ஊழியரின் நடத்தை பற்றி விசாரணை!

### முச்சந்தி முரளி



தூக்கி வீசி துண்டாட வழி சொல்லுறார் உவர். சரித்திரப் பெருமைதான் கிடைக்கும் பாருங்கோ...!

## தளபதி நேரடியாக தானே நடத்துகின்றார்

கொழும்பு, பெப்ரவரி 25

விமானப்படையின் வானூர்திகள் பல அடுத்தடுத்து இழக்கப்பட்டதை அடுத்து விமானப் படையின் சில பிரிவுகளில் பணியாற்றும் ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளின் நடவடிக்கைகள், நடத்தைகள் குறித்து விமானப் படைத் தளபதி ஏயர் வைஸ் மார்ஷல் ஒலிவர் ரணசிங்க தானே நேரடியாக விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றார்.

கொழும்பு ஆங்கிலத் தினசரியான 'த ஐலண்ட்' இத்தகவலை வெளியிட்டிருக்கின்றது.

இந்த விசாரணைகளை அவர் அதிகாரிகள் மட்டத்தில் மேற்கொள்ளாது, தானே நேரடியாக மேற்கொள்வதாகவும் —

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் பரவலாக தேடுதல், மோதல்!

யாழ்ப்பாணம், பெப். 25

குடாநாட்டில் நேற்றும் நேற்று முன்தினமும் படையினரின் சுற்றிவளைப்புத் தேடுதல்களும் மோதல் சம்பவங்களும் ஆங்காங்கே இடம்பெற்றன.

நேற்று முன்தினம் மானிப்பாய் மேற்கு, நவாலிப் பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டன. அப்பகுதியில் இளைஞர்கள் சிலர் நையப்புடைக்கப்பட்டனர்.

நேற்று முற்பகல் நவாலி அட்டகிரி மற்றும் சட்டுடைப் பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் இருபாலைப் பகுதியில் சரமாரியான துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன.

(8ஆம் பக்கம் பார்க்க)

## அனுராவுக்கு உரிய பாதுகாப்பு வழங்குமாறு அரசு பணிப்பு

கொழும்பு, பெப். 25

ஐ. தே. கட்சியின் எம். பியான அனுரா பண்டாரநாயக்காவின் பாதுகாப்பை உறுதிப்படுத்த உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு பொலீஸ்மா அதிபருக்கு அரசு பணிப்புரை விடுத்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் காலத்தில் தம்மைக் கொல்ல சில சக்திகள் சதித்திட்டம் தீட்டியிருப்பதாக திரு. அனுரா பண்டாரநாயக்கா பொலீஸ்மா அதிபருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அதனையடுத்தே அரசாங்கம் இந்தப் பணிப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 12 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை படை நடவடிக்கையால் அழிவு

### விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு

மணிலா, பெப். 25

கடந்த பெப்ரவரி 4 ஆம் திகதி முதல் வன்னிப் பகுதியில் ஸ்ரீலங்காப் படைகள் மேற்கொள்ளும் 'எடிபல' இராணுவ நடவடிக்கையின் போது தமிழ் மக்களுக்குச் சொந்தமான 12 ஆயிரம் ஏக்கர் நெல் வயல்கள் படையினரால் அழிக்கப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் லண்டன் பணிமனை கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டிருக்கின்றது.

வடக்கு - கிழக்கு தமிழ்மக்களின் பொருளாதாரத்தை அழிக்கும் நோக்கில் அரச படைகள் ஆயிரக்கணக்கான ஏக்கர் விளை நிலங்களை அழித்து வருவதாகவும் புலிகள் குற்றம் சுமத்தினர்.

(உ-10)

## புலிகளின் தாக்குதல்கள் மட்டும் விமான இழப்புக்குக் காரணமல்ல!

கொழும்பு, பெப். 25

விமானப் படையினரின் இழப்புகளுக்கு புலிகளின் தாக்குதல் மட்டும் காரணமல்ல பி. பி. ஸியில் ஒலிபரப்பான மத்தியூ சான்ஸ் என்பவரின் செய்திக் கட்டுரையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அக் கட்டுரையின் முக்கிய பகுதிகள் வருமாறு:-

கடந்த இரு வருடங்களும் ஸ்ரீலங்கா விமானப் படைக்கு மிகத் துர்ப்பாக்கியமானவை.

விமானப் படையில் 13 வானூர்திகள் இரண்டு வருடங்களில் வீழ்ந்து நொறுங்கின. இவ்வாண்டில் முதல் இரு மாதங்களுக்குள் ஐந்து விமானங்களை விமானப் படை இழந்தது.

இது இலங்கையைப் பொறுத்தவரை பேரிழப்பாகும்.

இவற்றில் சில காணாமற் போயின; சில சுட்டு வீழ்த்தப்பட்டன; சில இயந்திரக் கோளாறு காரணமாக வீழ்ந்து நொறுங்கின.

விமானங்கள் வீழ்ந்த சில சந்தர்ப்பங்களில் புலிகள் சம்பந்தப்பட்டிருக்கலாம். விமான எதிர்ப்புத் தாக்குதல் நடவடிக்கைகளில் அவர்கள் தற்போது முன்னேற்றம் அடைந்துள்ளனர் என இராணுவ ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

1994 இல் புலிகளுக்கு விமான எதிர்ப்பு 'சாம்' ரக ஏவுகணைகள் கிடைத்துள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் தாக்குதல்; பொலீஸ் அதிகாரி பலி!

கொழும்பு, பெப். 25

மன்னார் ஆஸ்பத்திரி வீதியில் பொலீஸார் மீது நேற்று நண்பகல் விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இச் சம்பவத்தில் பொலீஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்தார். அவரது ஆயுதங்களைப் புலிகள் அபகரித்துச் சென்றுள்ளனர்.

பொலீஸார் திருப்பித் தாக்கியதில் விடுதலைப் புலிகளுக்குச் சேதங்கள் ஏற்பட்டிருக்கலாம் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

தகவல் ஒன்று கிடைத்ததை அடுத்து குறிப்பிட்ட இடம் ஒன்றை நோக்கிப் பொலீஸார் சென்று கொண்டிருந்தனர் என்றும் —

அப்போதே அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-ஐ)

### பண்டா-செல்வா, டட்லி-செல்வா ஒப்பந்தங்கள் போன்று

## தீர்வுத் திட்டத்தைத் தூக்கி எறிந்து சரித்திரத்தில் பெருமை பெறுங்கள்!

### சிங்கள பாதுகாப்பு அமைப்புத் தலைவர் கோரிக்கை

கொழும்பு, பெப். 25

''அரசு முன்வைத்துள்ள அதிகாரப் பரவலாக்கல் பொதியை தூக்கி எறியும் நேரம் வந்துவிட்டது. அதைத் தூக்கி எறிந்து 'நாட்டைக் காப்பாற்றியவர் பீரிஸ்' என்ற வாசகம் மகாவம்சத்தில் இடம்பெற வழிவகுத்துக் கொள்ளுங்கள்!''

— இப்படி சிங்கள பாதுகாப்பு அமைப்பின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான காமினி ஜயசூரிய நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸிடம் கோரியுள்ளார்.

'நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பீரிஸுக்கு ஒரு வேண்டுகோள்' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே அவர் இப்படிக் கோரியுள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட முக்கிய பகுதிகள் வருமாறு:-

''அன்பார்ந்த பீரிஸ் அவர்களே! அரசியல் தீர்வுப் பொதியைத் தூக்கி எறியும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### சிங்கப்பூர் - இலங்கை அணிகளுக்கு இடையிலான

## உலகக் கிண்ண றகர் ஆட்டத்தை கொழும்பில் நடத்த பின்னடிப்பு!

### பாதுகாப்பு இல்லையாம்

கொழும்பு, பெப். 25

இலங்கை — சிங்கப்பூர் 'றகர்' அணிகளுக்கு இடையில் எதிர்வரும் முதலாம் திகதியில் கொழும்பில் நடைபெறவிருந்த உலகக் கிண்ணச் சுற்றுப் போட்டியின் — தகுதிகாண் ஆட்டம் பாதுகாப்புக் காரணங்களுக்காக கொழும்பில் நடைபெற மாட்டாது என்று உலகக் கிண்ண றகர் சுற்றுப்போட்டி ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

ஆசியாவிலுள்ள நடுநிலை நாடு ஒன்றில் அல்லது சிங்கப்பூரில் இப்போட்டியை நடத்துவதற்கு ஆலோசிக்கப்பட்டு வருவதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் இலங்கை றகர் சங்கத்துக்கு அறிவித்துள்ளனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுவிக்கப்படுவோர் மீது மீண்டும் வழக்குத் தொடர்வது பெரும் அநீதி

## கூட்டணி எம். பி. சட்டமா அதிபருக்குக் கடிதம்

கொழும்பு, பெப். 25

''பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகால சட்டம் போன்றவற்றின் கீழ் பல வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் விடுதலை செய்யப்படும் பொழுது, மீண்டும் அவர்களுக்கு எதிராக பல வழக்குகளைத் தாக்கல் செய்து தொடர்ந்து அவர்களை இன்னும் பல வருடங்கள் தடுத்து வைப்பது வன்மையாக கண்டிக்கத்தக்க அடிப்படை மனித உரிமை மீறல் செயலாகும்.''

தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் சட்டமா அதிபர் சரத் என் சில்வாவிற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற மனிதாபிமானமற்ற நடவடிக்கைகள் வேண்டுமென்றே செய்யப்படுவதாகவும்—

இது தமிழ் இளைஞர்களை பழி வாங்கும் நோக்குடன் கடைப்பிடிக்கப்படும்காட்டுமிராண்டித்தனமான செயலாகக் கருதப்பட வேண்டும் என்றும்—

விடுதலை செய்யப்படும் தமிழ் இளைஞர்களுக்கு எதிராக மீண்டும் வழக்குகளை சோடிக்கும் பொலிஸாரின் செயலைக் கட்டுப்படுத்த சட்டத்தில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்றும் —அந்தக்கடிதத்தில் அவர் மேலும் கோரியுள்ளார்.

---

## கண்ணீர் அஞ்சலி

### கணபதிப்பிள்ளை கந்தையா

எமது கல்லூரி ஆசிரியர் திரு. இ. மா. சிவசுப்பிரமணியம் அவர்களின் மாமனார் க. கந்தையா அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

(45486)

---

## 10ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு: 13 — 03 — 1940



இறப்பு: 25 — 02 — 1987

### திருமதி மனவல் எவிலினம்மா
(11ஆம் வட்டாரம், புங்குடுதீவு)

பாசத்தால், நேசத்தால் அரவணைத்தாய்
அனைவரையும்
அன்பான அம்மாவாய், பண்பான மாமியுமாய்
பாசமிகு பேர்த்தியுமாய் வாழ்ந்த எம் தெய்வமே!
உம்மைப் பிரிந்து பத்து ஆண்டுகள்
மறைந்தாலும் உம் துயரால் வாடிநிற்கும்

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மகன் ம. தாசன் (சவுதி).

''இனிதா'',
02, பேக்கரி லேன்,
ஆஸ்பத்திரி றோட்,
யாழ்ப்பாணம்.

(9319)

---

## 31 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

தாயின் மடியில்: 20 — 12 — 1922



இறைவன் அடியில்! 26 — 01 — 1997

### அமரர் செல்லையா வேலுப்பிள்ளை
(ஓய்வுபெற்ற என்ஜின் சாரதி, சாவகச்சேரி - முல்லைத்தீவு மின்பகுதி; சிந்தாமணி முருகன் ஆலய அறங்காவலர்)

எம்மையெல்லாம் வளர்த்து ஆளாக்கிய
எம் அன்புத் தெய்வமே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும்
எம்மை விட்டகலா உங்கள் நினைவுகள்!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
முருகனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கண்டி றோட்,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

(9318)

---

## 52 இலங்கையர் கைது!

போலந்து நாட்டில் இருந்து சட்ட விரோதமாக ஜேர்மனிக்குள் நுழைய முயன்ற 52 இலங்கையர்களைத் தாம் கைது செய்துள்ளதாக போலந்து எல்லைப்புற காவல் துறையினர் தெரிவித்தார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்களாக இருக்கலாம் எனவும் அறியப்படுகிறது. (உ-3)

## சைக்கிள் இலக்கத் தகடு

சாவகச்சேரி நகரசபையினால் இந்த வருடத்துக்கான சைக்கிள் இலக்கத் தகடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சைக்கிள் உரிமையாளர்கள் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் தத்தமது சைக்கிள்களுக்கு இலக்கத் தகடுகளை பெற்றுக் கொள்ளுமாறு நகரசபை செயலாளர் சி. நடராசா அறிவித்துள்ளார். (இ-117)

## வாகனப் பதிவு புத்தகங்கள் தபாலில்

யாழ். செயலக மோட்டார் போக்குவரத்து பதிவுத் திணைக்களத்தில் பதிவு செய்தவர்களில் 500 பேரின் வாகனப் பதிவுப் புத்தகங்கள் கிடைத்துள்ளன.

ஆவணங்கள் எதுவும் இல்லாத வாகனச் சொந்தக்காரர்கள் விசேட ஏற்பாட்டின் கீழ் செயலகத்தில் பதிந்து தபக்குரிய வாகன இலக்கத்தையும் பெற்றிருந்தனர்.

இவ்வாறு பதிவு செய்தவர்களில் 500 பேரின் பதிவுப்புத்தகங்கள் செயலகத்துக்குக் கிடைத்து அவை தபாலில் அனுப்பப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்தும் புத்தகங்கள் கிடைத்தவுடன் அவை தபாலில் சேர்க்கப்படும் என்று அப்பிரிவு அதிகாரி தெரிவித்தார். (இ-3)

## நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், பெப். 25

கடந்த மாதம் 29 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் நடைபெற்ற தாதிகள் தெரிவு நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கத் தவறிய விண்ணப்பதாரர்களை எதிர்வரும் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் கோரியுள்ளார். (இ-4)

---

பேராதனைப் பல்கலைக்கழக

## ஜீ. ஏ. கியூ. பரீட்சை இங்கும் நடைபெறும்

கொழும்பு, பெப். 25

பேராதனைப் பல்கலைக்கழக பொதுக்கலை முதற் தேர்வு (ஜீ. ஏ. கியூ) — பரீட்சையையும்,

மற்றும் எழுதுவினைஞர்களுக்கான சுப்ரா தரமுயர்வு போட்டிப் பரீட்சையையும்—

யாழ்ப்பாணத்தில் நடத்த இணக்கம் ஏற்பட்டுள்ளது. உள்ளூராட்சித் தேர்தல்களின் பின்னர் இப் பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும் என உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

இவ்விரு பரீட்சைகளையும் கொழும்பில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டதை அடுத்து, யாழ். மாவட்டத்தில் இருந்து இப் பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகள் யாழ். மாவட்ட எம். பியும், ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமுமாகிய டக்ளஸ் தேவானந்தாவிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

இது தொடர்பாக அவர் கொழும்பு அதிகாரிகளுடன் பேசிய தையடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (இ-3)

---

## கொழும்பு மாநகரத் தேர்தல்:

## தமிழர் நடவடிக்கைக் குழு நவசமசமாஜிகளுக்கு ஆதரவு

''கொழும்பு மாநகர சபை தேர்தலில் தமிழ் மக்கள் நவசமசமாஜக் கட்சிக்கே வாக்களிக்க வேண்டும்'' — என்று கொழும்புத் தமிழர் நடவடிக்கைக் குழு கேட்டுள்ளது.

''தமிழர் பிரச்சினைகளை தீர்க்க பொது மக்கள் ஐக்கிய முன்னணியும், ஐ. தே. கட்சியும் தவறிவிட்டன. அக் கட்சிகள் தமது நலனுக்காகவே தமிழர் பிரச்சினைகளைக் கையாண்டு வருகின்றன.

''ஆகவே தமிழர் தமது நிலையை உலகுக்கும், நாட்டுக்கும் வெளிக்காட்டும் வகையில் நவசமசமாஜக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும்— என்றும் அக்குழு கேட்டுள்ளது.

## தமிழ் யுவதி கைது

வடபகுதியைச் சேர்ந்த இளம் தமிழ்ப் பெண் ஒருவர் கண்டியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

தான் புலிகளிடம் பயிற்சி பெற்றதாக அப்பெண் விசாரணையின் போது தெரிவித்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-3-150)

---

## மரண அறிவித்தல்கள்

### தம்பியப்பா பூபால்பிள்ளை
(இளைப்பாறிய ஊழியர், மின்சாரசபை,)

கொத்தாவத்தை, மல்லாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரான தம்பியப்பா பூபாலபிள்ளை 24 - 02 - 1997 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பியப்பா தம்பதிகளின் அன்புமகனும், அன்னம்மாவின் கணவரும், தவராணி, நந்தகுமாரன் (ஜேர்மனி), செல்வராணி, கதிர்காமநாதன் (சுவிஸ்), நகுலேஸ்வரன், சசிகலா, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத்தந்தையும், தங்கம்மா, தங்கராசா, கோபாலு ஆகியோரின் சகோதரரும், தர்மகுலசிங்கம் (டோகா), கீத்தா (ஜேர்மனி) துசியந்தி (துளசி) ஆகியோரின் மாமனாரும், பாமிளா, பரன், நிதர்சன், அன்பரசன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 25-02-97 காலை 10 மணியளவில் அவரது தற்போதைய வசிப்பிடமாகிய சுன்னாகம் கிழக்கு சுன்னாகத்தில் நடைபெற்று பூதவுடல்தகனக் கிரியைக்காக கொற்றியாவடி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

தகவல்!
பூ. நகுலேஸ்வரன்
(மகன்)

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

(45479)

### சூசைப்பிள்ளை கிறிசோஸ்திரம்
(ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர்)

அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட சூசைப்பிள்ளை கிறிசோஸ்திரம் 24 - 02 - 97 இல் காலமானார்.

இவர் மேரி றோசலின் தவமணியின் அன்புக் கணவரும், S. C. இம்மானுவல் (B. Sc.), சின்னமலர், அன்னமலர் காலஞ்சென்ற தனிநாயகம் (முன்னாள் பொறியியலாளர், பிரான்ஸ்) மற்றும் சேவியர் (பிரான்ஸ்), ரஞ்சினி (கனடா), எமில்ராசன் (கனடா), யோசேப் துரைநாயகம் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாளர் ஸ்ரனிஸ்லாஸ் (முன்னாள் அதிபர், புனித சூசையப்பர் கல்லூரி, அனுராதபுரம்), யேசுரட்ணம் (கனடா), ராஜேஸ், சேவியர் (உரிமையாளர், சேவிகிளாஸ் நிறுவனம்), ராணி, ஜெசன்மதி, ஜெயராணி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹென்றி செல்வராசாவின் சகோதரரும், சேர் சிற்றம்பலம் காடினரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25 - 02 - 97), செவ்வாய்க்கிழமை 2-30 மணிக்கு அவரின் இல்லத்திலிருந்து புனித சூசையப்பர் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுத்தபின், நல்லடக்கத்திற்காக புனித சூசையப்பர் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
கி. தவமணி
(மனைவி)

முதலியார் வளவு,
அச்சுநகர்,
அச்சுவேலி.

(45485)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல்குற்றச்சாட்டுக்களை அடுத்து இஸ்ரேல் அரசு கவிழும் நிலையில்

டெல்அவிவ், பெப். 25

சட்டமா அதிபர் நியமனத்தில் ஊழல் இடம் பெற்றுள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டு விசாரணைக்குள்ளாகியிருக்கும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நந்தனியாகுவின் அரசு கவிழும் அபாயத்தை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்தவாரம் மேற்கொள்ளப்பட்ட இஸ்ரேல் பொலீஸாரின் விசாரணையின் போது சில கேள்விகளுக்கு பிரதமர் பதில் கூற மறுத்துவிட்டார் என்று கூறப்படுகிறது.

விசாரணையின் போது தனக்கு உதவுவதற்காக பிரபல வழக்கறிஞர் ஒருவரின் உதவியை நத்தனியாகு நாடியுள்ளார். (இ-10)

## உலகில் 20 லட்சம் பேர் வருடாந்தம் பார்வை இழப்பு?

ஆண்டொன்றுக்கு சுமார் 20 லட்சம் பேர் உலகில் கண்பார்வை இழந்து வருகிறார்கள் என உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

தற்போது உலகில் 380 லட்சம் பேர் கண்பார்வை இழந்துள்ளனர் எனவும் சுமார் 11 கோடிப் பேர் குறைப் பார்வையுடன் இருக்கிறார்கள் எனவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

இவர்களில் 90 சத வீதமானோர் வளரும் நாடுகளைச் சேர்ந்தவர்கள். 'கக்ஹோமா' 'கற்றாக்' மற்றும் 'குளொஹோமா' என்ற மூன்று வகை நோய்களே கண் பார்வை இழப்பிற்கு முக்கிய காரணம் எனக் கூறப்படுகிறது. (ஐ-10)


## கண்ணீர்ப் பூக்கள்

எமது நிறுவனத்தின் ஆங்கில ஆசான்
**திரு. தெய்வதவபாலன்** அவர்களின் அன்பு மனைவியும்
தாவரவியல் ஆசிரியை
**செல்வி தெய்வசக்தி தெய்வதவபாலனின்**
அன்புத்தாயாருமான
**திருமதி மகேஸ்வரி தெய்வதவபாலன்**
(ஆசிரியை)

அவர்களின் மறைவையொட்டி துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரது ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

**இயக்குநர், ஆசிரியர்கள், மாணவர்கள்,**
**'சுப்றா' கல்வி நிறுவனம்**
**சித்தன்கேணி.**

(45472)


## மேற்கிந்திய அணி கப்டனாக கொட்னி வால்ஷ்

இந்திய அணிக்கு எதிரான டெஸ்ட்போட்டித் தொடரின் போதுவேகப்பந்து வீச்சாளர் கொட்னி வால்ஷ் மேற்கிந்திய அணிக்குத் தலைமை வகிப்பார்.

இரண்டு மாதச் சுற்றுப் பயணமாக மேற்கிந்திய தீவுகளுக்குச் செல்லும் இந்திய அணி 5 ரெஸ்ட் போட்டிகளிலும் 4 ஒரு நாள் போட்டிகளிலும் பிராந்தியங்களுக்கு எதிரான 3 போட்டிகளிலும் கலந்து கொள்ளும். (இ-10)

## பிங்கின் உடல் தகனம்

சீனத்தலைவர் டெங்ஷியாஓ பிங்கின் உடல் தகனம் செய்யப்பட்டது.

சிதைக்கு தீ மூட்டப்படுவதற்கு முன்பாக அவரது நெருங்கிய உறவினர்கள் இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

சீனத் தலைநகர் முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. (இ-10)

## பெனாஸீர் மீது விசாரணை

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாஸீர் பூட்டோ அவரது சகோதரர் முர்தாஸா பூட்டோவின் கொலை தொடர்பாக நீதிபதிகளினால் விசாரிக்கப்பட்டார்.

தனது சகோதரனின் கொலைக்கு காரணமானவர்களை கண்டுபிடிக்க வேண்டுமெனில் முர்தாஸாவின் புதைக்கப்பட்ட உடல் மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டு பரிசோதனை செய்யப்பட வேண்டும் என பெனாஸீர் பூட்டோ கோரியுள்ளார் (இ-.10)

## மீண்டும் யெல்ட்ஸின்

நோய்வாய்ப்பட்டு கடந்த 3 மாதங்களாகப் பொது நிகழ்ச்சிகள் எதிலும் கலந்து கொள்ளாதிருந்த ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ட்ஸின் கடந்த ஞாயிறன்று மீண்டும் பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

''எனதுஉடல்நிலைகுறித்து இரகசியங்கள் எதுவுமில்லை. எனது உடல் நிலை குறித்த வெள்ளை அறிக்கையைக் கோரி ரஷ்ய நாடாளுமன்றம் எனக்கு விளையாட்டுக் காட்டப் பார்த்தது'' என அவர் தெரிவித்தார். (இ-10)

## இந்திய விமான சேவை நட்டத்தில்

இந்திய விமானத் துறையைச் சேர்ந்த ''எயர் இந்தியா'' நிறுவனம் நடப்பு நிதியாண்டில் சுமார் 35 கோடி ரூபா இழப்பினைச் சந்திக்கும் என அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இழப்பினை ஈடுசெய்வதற்காகப் பயணக் கட்டணங்களை அதிகரிக்கும் [illegible]மொன்றை அமுல் செய்ய [illegible] அமைச்சர் அனுமதி வழங்க மறுத்துள்ளார். (ஐ-10)

## சவூதியில் பிச்சைக்காரனிடம் 'செலூலர்' தொலைபேசி!

றியாத், பெப். 25

சவூதியில் பிச்சைக்காரர் ஒருவர் தனது பாவனைக்காக செலூலர் தொலைபேசி வைத்திருந்தார்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

அண்மையில் சவூதி அரேபியாவின் 'அரபு நியூஸ்' பத்திரிகையின் பெண் செய்தியாளர் ஒருவர் வீதி ஓரத்தில் இருந்த பிச்சைக்காரன் ஒருவன் 'செலூலர்' தொலைபேசி ஒன்றை வைத்திருந்ததைக் கண்டார்.

இந்தப் பிச்சைக்காரனின் உண்மையான வாழ்க்கை நிலையைக் கண்டறிவதற்காக அப்பெண் செய்தியாளர் தாமும் பிச்சைக்காரி போல் வேடமிட்டு சவூதி அரேபியாவின் ஜெட்டா நகரின் முக்கிய வணிக வளாகங்கள் மற்றும் பொழுதுபோக்கு மையங்களின் முன்பு அமர்ந்திருந்து 3 நாள்கள் பிச்சை எடுத்தார்.

அப்போதுதான் பிச்சைக்காரர் ஒருவர் 'செலூலர்' தொலைபேசி வைத்திருந்த உள்விவகாரம் அவருக்குத் தெரியவந்தது.

மூன்று நாள்களில் அந்தப்பெண் செய்தியாளருக்கு பிச்சையாகக் கிடைத்த பணம் எவ்வளவு தெரியுமா? 1923 சவுதி றியால்கள். அதாவது 530 அமெரிக்க டொலர்கள்.

இந்தத்தொகையை 9 மணிநேரத்தில் இப்பெண் செய்தியாளர் பெற்றுவிட்டதாக 'அரபு நியூஸ்' பத்திரிகை தெரிவிக்கின்றது. (இ-5)

## குடியேற்றச் சட்டத்தை எதிர்த்து பிரான்ஸில் ஆர்ப்பாட்டப் பேரணி

பாரிஸ், பெப். 25

பிரான்ஸில் சட்டவிரோதமாகக் குடியேறுபவர்களை சட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் கொண்டுவரவுள்ள சட்டத்தை ஆட்சேபித்து பாரிஸ் நகரில் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தினர்.

பிரான்ஸில் அறிவுத்துறையினரும், கலைஞர்களும், இடதுசாரிகளும், அரசியல் தலைவர்களும் இந்த ஆர்ப்பாட்டத்துக்குத் தலைமை வகித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்திலும் பேரணியிலும் ஒருலட்சத்துக்கும் அதிகமான மக்கள்கலந்து கொண்டனர் என்றுஅமைப்பாளர்கள் கூறினர். (இ-3)


## ஓராண்டு நினைவலைகள்



செல்வி கதிரவேலு பவானி

**பிறப்பு:** **1968-06-10**
**உதிர்வு:** **1996-03-07**
**திதி: 1997-02-25**

ஆண்டொன்று ஓடி மறைந்தம்மா
எம்மைவிட்டு, ஆறவில்லை
எம் இதய வேதனைகள் இப்பாரை விட்டு,
மணக்கோலம் பார்க்கவென்று
அனுப்பிவைத்தோம் ஜேர்மனிக்கு
பிணக்கோலம் நாம்கண்டு கதறி நின்றோம்
கொழும்பினிலே. பொல்லாத நோய் உன்னைத்
தேடி பாதிவழியில் வந்த வேளை
பதறி நின்றோம் நாம் இங்கு.
பரலோகம் அழைத்துவிட்டாரே பரமன் அங்கு
பரிதவிக்கின்றோம் உம்பிரிவால் நாங்கள் இன்று.

''நின்உருவம் மறைந்தாலும் எம்
நினைவுகளில் நீ என்றும் வாழ்வாய்.''

உன் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

**அன்புத் தாய் கதிரவேலு பரிமளம்,**
**அக்கா, அத்தான், அண்ணாமார், அண்ணிமார்,**
**அன்புத் தம்பி, பெறாமக்கள், மருமக்கள்,**
**மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார்.**

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(9295)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி வைத்திலிங்கம் பாக்கியம்
(ஊரெழு வடக்கு, சுன்னாகம்)

**தோற்றம்:** **16-01-1916**
**மறைவு:** **26-01-1997**

அன்பெனும் பிடியில் அசப்படுத்தி எமையெலாம்
இன்பமாய் வளர்த்த இனிய எம்தாயே
துன்பங்கள் துடைத்து தூயநல் லறிவூட்டி
நன்மக்கள் என்றிடவே நலங்கொள வைத்தாயே!
தன்னலங் கருதாமல் தாயன்பு கொண்டென்றும்
மேன்மக்கள் வரிசையிலே மேதினியில் வாழ்ந்தாயே!
உன்னுருவம் கண்முன்னே உலகில் நாமுள்ளவரை
என்றென்றும் எழிலாகத் தெரியுமே எம்தாயே!

உங்கள் பிரிவால் துயருறும்:
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

காங்கேசன்துறை வீதி,
மல்லாகம் வடக்கு.

தற்காலிக முகவரி:
இல. 19, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(45478)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ உபகரணங்களுக்கு ஆஸ்பத்திரியில் பெரும் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், பெப். 25

பல நூற்றுக்கணக்கான நோயாளர்கள் நாளாந்தம் சிகிச்சை பெறும் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் மருந்துவகைகளுக்கு மட்டுமன்றி மருத்துவ உபகரணங்களுக்கும் பெருந் தட்டுப்பாடு நிலவுகிறது.

நீண்டகாலமாக நிலவிவரும் இத் தட்டுப்பாட்டினால் உரிய முறையில் சிகிச்சைகளை அளிப்பதில் சிரமங்களும், தாமதங்களும் ஏற்பட்டுள்ளன.

தட்டுப்பாடாக உள்ள இந்த மருத்துவ உபகரணங்கள் அனைத்துமே நாளாந்த வைத்திய சிகிச்சைக்கு டாக்டர்கள் பயன்படுத்தும் சாதாரண உபகரணங்கள் ஆகும்.

ஒரு நோயாளிக்கு ஒரு தடவை மட்டும் பயன்படுத்திவிட்டு வீசிவிடும் டிஸ்பொசிபிள் ஊசிகள் (Disposable Syringes) —

சிறிய சத்திர சிகிச்சைகளுக்குப் பயன்படுத்தப்படும் சிறிய கத்திகள் (Sureical Blades) —

சிறுநீரகக் கோளாறுகளினால் சிறுநீர் வெளியேறாது அவஸ்தைப்படும் நோயாளர்களுக்கு சிறுநீரை அவசரமாக வெளியேற்றப் பயன்படுத்தும் கதீற்றர்கள் (Folleys Catheter) —

மார்பு சம்பந்தப்பட்ட நோயாளிகளது நோய்களை இனங்கண்டு சிகிச்சையை இலகுவாக்கும் ஈ. சீ. ஜீ. இயந்திரத்துக்குப் பயன்படுத்தப்படும் ஈ. சீ. ஜி. பேப்பர் சுருள் (E.C. G Rolls) —

இரத்த அழுத்தம் பரிசோதிப்பதற்காக பயன்படுத்தப்படும் கருவிகள் (B. P. Apparatus) —

சேலைன், டெக்றோல் மற்றும் ஊசி மருந்து வகைகள் என்பவற்றை ஒரு நோயாளிக்கு தொடர்ந்து உடலில் செலுத்தப் பயன்படும் ஊசி வகைகள் (Ven Floan I.V. Cannula)-

வயிறு சம்பந்தப்பட்ட நோய்களால் வயிற்றுக்குள் சேரும் கழிவு நீரை தொண்டைக் குழாய் மூலம் அப்புறப்படுத்தப் பயன்படுத்தப்படும் என்டோ ட்ரக்கிள் ரியூப்கள் (Endo Trachgal Tubes) போன்ற இன்னும்பல மருத்துவ உபகரணங்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. சில உபகரணங்கள் முற்றாகவே இல்லாமல் உள்ளன.

இந்த உபகரணங்களை கொழும்பில் இருந்து தருவிக்க பலமுறை எடுக்கப்பட்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை என்றும் –

ஆஸ்பத்திரி நிர்வாகத்தின் கோரிக்கைகள் கொழும்பு அதிகாரிகளால் தட்டிக்கழிக்கப்படுவதாகவும் ஆஸ்பத்திரி வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. (ஐ)

## மீண்டும் நேர்முகப் பரீட்சை நடத்துமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.25

கடந்த வருடம் பெப்ரவரி 24 ஆம் திகதி நடந்த போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து, நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு, அதில் தோற்ற முடியாது போனவர்களுக்கு மீண்டும் நேர்முகப் பரீட்சை நடத்தும்படி கல்விச் சேவை ஆணைக் குழுவிடம் கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பான நேர்முகப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடந்தபோது, அழைக்கப்பட்டவர்களில் அரைவாசிப் பேரே தோற்றி இருந்தனர்.

அச்சமயம் வன்னியில் தங்கியிருந்த சுமார் 100 இக்கு மேற்பட்டவர்கள் தற்சமயம் குடா நாட்டுக்கு திரும்பியுள்ளனர் என்றும் —

தமக்கு நேர்முகப் பரீட்சை நடத்துமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் என்றும் — தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## குப்பி விளக்கு தட்டுண்டு சிறுமி காயம்

யாழ்ப்பாணம், பெப். 25

குப்பிவிளக்கு தட்டுண்டு தீப்பற்றி எரிந்ததில் சிறுமி ஒருவர் படுகாயமடைந்தார்.

படித்துக்கொண்டிருந்த சமயம் இந்தச்சம்பவம் இடம்பெற்றது.

சரசாலையில் நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் கீரிமலையில் இருந்து இடம்பெயர்ந்த சிவஞானசேகரம் சங்கீதா (வயது 8) என்ற சிறுமியே படுகாயமடைந்தவராவார். (இ-15)

## தவக்காலச் சிந்தனை

(14 ஆம் நாள் செவ்வாய்)

''தீமை செய்வதை விட்டொழியுங்கள்; நன்மை செய்யக் கற்றுக் கொள்ளுங்கள்'' (இசை. 1:16,17) மனிதன் இறைவனைப் போல ஆக வேண்டுமென்று நினைத்தான். பாவத்திற்கு காரணம் அதுவே. ஆதியிலிருந்தே தீமை மனிதனைத் தொடர்ந்து கொண்டு வருகின்றது. மனிதன் எப்போதெல்லாம் இறைவனின் ஸ்தானத்தில் இருக்க விரும்புகின்றானோ அப்போதெல்லாம் தீமையும் துன்பமும் எம்மை நெருங்கி வருகின்றன.

வலுவற்றவர்களைச் சுரண்டுதல், அடக்கியொடுக்குதல் போன்ற நீதியற்ற செயற்பாடுகளால் யாரெல்லாம் மகிழ்வைத் தேடுகிறார்களோ அவர்கள் மக்கள் மேல் சுமைகளைச் சுமத்துகிறார்கள். பரிசேயர்கள் இவ்வாறுதான் செயற்பட்டார்கள். நீ இயேசுவின் சீடனா? அவ்வாறு இருக்கக் கூடாது. நீ பெரியவனாக விரும்புகின்றாயா? பணியாளாக மாறு! தேவைகள் நிறைவாகும்! தீமைக்கு இடமேது?

அபிர்ராஜன்

# அமைச்சர் பௌசி அரசியலுக்கு முழுக்கு?

கொழும்பு, பெப். 25

''சுகாதார, சமூகசேவைகள் அமைச்சர் பௌசி அரசியலுக்கு முழுக்குப்போட முடிவு செய்துவிட்டார்.''

மேற்கண்டவாறு கொழும்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் பிரமுகர் தமது குடும்பத்தினரையோ அல்லது உறவினரையோ உள்ளூராட்சித் தேர்தலில் வேட்பாளராக நியமிக்கக்கூடாது என்று ஜனாதிபதி கண்டிப்பான உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இந்நிலையில் அமைச்சர் பௌசி தமது மகனை கொழும்பு மாநகரசபையில் பொதுமக்கள் ஐக்கியமுன்னணி ஆதரவான சுயேச்சைக் குழுவில் வேட்பாளராக நிறுத்தியுள்ளார்.

இதற்காக அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முயற்சி எடுக்கப்படும் நேரத்தில், தாம் அரசியலில் இருந்து ஒய்வு பெறப்போவதாக அமைச்சர் பௌசி அறிவித்துள்ளார்.

சுதந்திரக்கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளர் பதவியையும் துறக்கப்போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமது மகனை அரசியலில் ஈடுபடுத்தவே இந்த முடிவைத் தாம் எடுத்துள்ளதாகவும் —

இது குறித்து ஜனாதிபதிக்கு ஏற்கனவே அறிவித்துவிட்டதாகவும் — அமைச்சர் பௌசி கூறினார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-150-3)


## முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்: 24 — 09 — 1928

மறைவு: 21 — 02 — 1996

அமரர் சந்தர் பொன்னையா

அன்பான மனங்களில் ஆயிரத்தில் ஒருவரையா
ஆலய தீபம் தன்னில் அகல் விளக்கையா
இக பர சுகம் தந்த எம்மையா — நீங்கள்
இதயத்தை கொள்ளை கொண்ட பொன்னையா!

பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

அச்சுவேலி தெற்கு. (9315)

## நெஞ்சம் விட்டகலா நினைவுக் காணிக்கை

12-ம் ஆண்டு நிறைவில் 31-ம் நாள் நினைவில்





அமரர் காசிநாதன் சிதம்பரநாதன்

தோற்றம்: 05-04-1910 மறைவு: 23-01-1985

திருமதி சிதம்பரநாதன் நேசமலர்

தோற்றம்: 05-11-1911 மறைவு: 26-01-1997

அன்பாய் அரவணைத்து எம்மை ஆதரித்து வளர்த்த தெய்வங்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (25-02-1997) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஈஸ்வரபதி,
சேச்லேன். உடுவில். (சி-194)

## தொழில் நுட்பக் கல்லூரி இறுதிப் பரீட்சை 1996/97

1997 மார்ச் மாதம் ஆரம்பிக்க உள்ள மேற்படி பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மாணவர்கள், உடனடியாக தொழில் நுட்பக்கல்லூரியில் துறைத்தலைவர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**முடிவு திகதி: 28 - 02 - 97**

**கற்கை நெறிகள்: தொழில், சான்றிதழ், டிப்ளோமா, உயர் டிப்ளோமா.**

— **அதிபர்.**

தொழில் நுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
1997-02-24. (சி-196)

## இறுதிப் பரீட்சை விண்ணப்பம் கோரல்

உயர் தொழில் நுட்பக் கல்லூரிகளின் பின்வரும் பயிற்சி நெறிகள் தொடர்பான பரீட்சை ஆணையாளரினால் நடத்தப்படும் பரீட்சைகளுக்காக, மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பரீட்சை விண்ணப்பப்படிவம் மற்றும் விவரங்களுக்கு உயர் தொழில்நுட்பக்கல்லூரியுடன் மாணவர் அனுமதி அட்டையுடன் நேரில் உடன் சமுகம் தரவும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி: 15 - 03 - 1997**

**பயிற்சி நெறிகள்:**

1. உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா II, III, IV
2. உயர் தேசிய வர்த்தக டிப்ளோமா ஆண்டு II, III
3. தேசிய வணிக டிப்ளோமா (2ஆம் ஆண்டு)
4. தேசிய நிதியில் டிப்ளோமா (2ஆம் ஆண்டு)
5. தேசிய ஆங்கில டிப்ளோமா (2ஆம் ஆண்டு)

ஒருங்கிணைப்பாளர்,
**உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம்.**

கலாசாலை வீதி,
சைவவித்தியா விருத்திச் சங்க நிலையம்,
திருநெல்வேலி. (சி-195)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமான-கப்பல் பயணிகளின் பட்டியல் இலக்கம்

விமானப் பயணத்துக்கு நேற்று வரை அனுமதிக் கப்பட்டபட்டியல் இலக்கங் கள்—

★ 232-க்குஉட்பட்டது.
★ 271 — 278
★ 330
★ 385

கப்பல் பயணத்துக்கு நேற்றுவரை அனுமதிக்கப் பட்டபட்டியல் இலக்கங் கள்—

★ 188 — 202
★ 409 — 524
★ 533, 535, 538

விமான — கப்பல் பயணங் களுக்காக யாழ். சிவில் நிர் வாக அலுவலகத்தில் பதிவு செய்தவர்களின் பட்டியல் இலக்கங்களை சிவில் நிர்வாக அலுவலகம் வெளியிட்டுள் ளது.

விண்ணப்பப்படிவ இலக்கத் தொடர் மற்றும் பட்டியல் இலக்கம் (அடைப்புக்குறிக் குள்) ஆகியவை வருமாறு:-

## விமானம்

★ 11,437 — 11,489 (206)
★ 11,457 — 11,441 (207)
★ 11,597 — 11,671 (208)
★ 11,673 — 11,714 (209)
★ 11,715 — 11,767 (210)
★ 11,766 — 11,809 (211)
★ 11,806 — 11,844 (212)
★ 11,841 — 11,874 (213)
★ 11,910 — 11,996 (214)
★ 11,997 — 12,031 (215)
★ 12,485 — 12,525 (216)
★ 12,036 — 12,076 (219)
★ 12,235 — 12,290 (220)
★ 12,526 — 12,609 (221)
★ 12,343 — 12,418 (222)
★ 14,788 — 14,851 (223)
★ 14,291 — 14,331 (224)
★ 12,078 — 12,120 (225)
★ 12,121 — 12,192 (226)
★ 11,876 — 11,909 (227)
★ 12,610 — 12,625 (232)
★ 12,630 — 12,646 (233)
★ 14,011 — 14,055 (234)
★ 11,356 — 14,963 (236)
★ 14,065 — 14,154 (237)
★ 14,155 — 14,186 (238)
★ 14,188 — 14,216 (239)
★ 14,426 — 14,383 (240)
★ 14,237 — 14,270 (241)
★ 14,273 — 14,403 (242)
★ 14,332 — 14,362 (243)
★ 14,398 — 14,658 (244)
★ 14,454 — 14,493 (245)
★ 14,494 — 14,532 (246)
★ 14,534 — 14,568 (247)
★ 14,569 — 14,609 (248)
★ 14,613 — 14,645 (249)
★ 14,659 — 14,751 (250)
★ 14,737 — 14,771 (251)
★ 14,852 — 14,942 (252)
★ 14,901 — 14,899 (253)
★ 14,952 — 14,973 (254)
★ 14,966 — 14,898 (255)
★ 15,012 — 15,083 (256)
★ 15,087 — 15,299 (257)
★ 15,154 — 15,195 (258)
★ 15,196 — 15,236 (259)
★ 15,237 — 15,284 (260)
★ 8,450, 11,470, 8,986, 10,042, 8,289, 10,253, 7,810 (262)
★ 12,668 — 14,006 (263)
★ 15,894 — 15,998 (265)
★ 15,733 — 15,792 (266)
★ 15,316 — 15,355 (279)
★ 15,438 — 15,467 (280)
★ 15,521 — 15,565 (281)
★ 15,576 — 15,626 (282)
★ 15,627 — 15,650 (283)
★ 15,794 — 15,837 (284)
★ 15,854 — 15,893 (285)
★ 14,219 — 14,737 (289)
★ 15,356 — 15,394 (290)
★ 15,479 — 15,512 (291)
★ 16,003 — 16,043 (292)
★ 15,718 — 16,084 (293)
★ 16,086 — 16,132 (294)
★ 16,135 — 16,197 (295)
★ 16,205 — 16,280 (296)
★ 15,662 — 15,849 (297)
★ 15,400 — 15,436 (298)
★ 16,439 — 16,499 (299)
★ 15,572 — 15,717 (300)
★ 15,698 — 15,717, 9620 (301)
★ 16,282 — 16,367 (302)
★ 15,384 — 16,384 (303)
★ 16,567 — 16,644 (304)
★ 15,572 — 16,564 (305)
★ 15,819 — 16,430 (306)
★ 15,478 — 16,660 (308)
★ 16,663 — 16,697 (309)
★ 16,702 — 16,763 (310)
★ 16,771 — 16,829 (311)
★ 16,837 — 16,872 (312)
★ 16,885 — 16,947 (313)
★ 16,948 — 17,000 (314)
★ 16,981 — 17,053 (319)
★ 17,054 — 17,082 (320)
★ 17,083 — 17,118 (321)
★ 17,120 — 17,190 (322)
★ 17,193 — 17,210 (323)
★ 17,213 — 18,685 (324)
★ 17,343 — 17,410 (325)
★ 17,411 — 17,492 (326)
★ 17,500 — 17,532 (327)
★ 17,533 — 17,603 (331)
★ 17,607 — 17,663 (332)
★ 12,673 — 17,738 (333)
★ 17,741 — 17,795 (334)
★ 17.798 — 17,884 (335)
★ 14,219 — 17,961 (336)
★ 17,962 — 18,002 (337)
★ 17,887 — 17,903 (338)
★ 17,986 18,100 (340)
★ 18,102 — 18,170 (341)
★ 18,259 — 18,299 (343)
★ 18,303 — 18,383 (344)
★ 18,406 — 18,432 (345)
★ 18,437 — 18,482 (346)
★ 18,483 — 18,501 (347)
★ 18,502 — 18,548 (348)
★ 18,554 — 18,592 (349)
★ 18,599 — 18,656 (350)
★ 18,657 — 18,706 (351)
★ 18,713 — 18,746 (352)
★ 18,748 — 18,805 (353)
★ 18,808 — 18,837 (354)
★ 18,182 — 19,184 (355)
★ 18,840 — 18,888 (356)
★ 19,185 — 19,231 (357)
★ 19,232 — 19,304 (358)
★ 19,313 — 19,365 (359)
★ 19,369 — 19,420 (360)
★ 19,429 — 19,464 (361)
★ 18,504 — 19,549 (362)
★ 19,551 19,651 (363)
★ 19,665 — 19,710 (364)
★ 19,711 — 19,753 (365)
★ 19,754 — 19,798 (366)
★ 19,807 — 19,858 (367)
★ 19,859 — 19,917 (368)
★ 19,918 — 19,961 (369)
★ 19,773 — 20,024 (370)
★ 20,025 — 20,075 (371)
★ 16,878, (20,076 — 20,119)(372)
★ 19,804, (20,127— 20,164) (374)
★ 20,165 — 20,256 (375)
★ 20,259 — 20,301 (376)
★ 20,302 — 20,384 (377)
★ 20,385 — 20,417 (378)
★ 20,446 — 20,518 (380)
★ 20.519 — 20,612 (381)
★ 20,613 — 20,755 (382)
★ 20,756 — 20,834 (383)
★ 6,923, 16,076, 11,815, 12,613, 6,196 (385)
★ 20,947, 20,121, 20,838 — 20,895 (386)
★ 20,896 — 20,967, 9,204, 11,815, 5,993 (387)
★ 20,968 — 21,155 (388)
★ 21,156 — 21,221 (389)
★ 21,222 — 21,283 (390)
★ 21,287 — 21,358 (392)
★ 21,359 — 21,394 (393)
★ 21,396 — 21,489 (394)
★ 21,490 — 21,528 (395)
★ 21,531 — 21,640 (396)
★ 21,252 — 21,679
★ (21,642 — 21,679) 21,252, 21,509 (397)
★ 21,685 — 21,815 (398)
★ 21,818 — 21,891 (399)
★ 21,921 — 21,999 (400)
★ 22,002 — 22,052 (401)
★ 22,053 — 22,122 (402)
★ 22,125 — 22'215 (403)
★ 22,218 — 22.244 (404)
★ 22,316 — 22,318 (408)
★ 22,322 — 22,434 (414)
★ 22,436 — 22,491 (419)
★ 22,494 — 22,528 (420)
★ 22,540 — 22,617 (424)
★ 22,626 — 22,700 (431)
★ 22,702 — 22,746 (436)
★ 22,752 — 22,816 (441)
★ 22,833 — 22,889 (447)
★ 22,890 — 22,996 (448)
★ 21,053 — 21,069 (449)
★ 18,823, 17,567, 18,064, 14,343 (459)
★ 241, 255 — A, 23,081, 23,071, 23,080, 21,076, 21,075, (476)
★ 21,084, 21,073 (476)
★ 23,339,—23,440 (477)
★ 23,441, — 23,507 (478)
★ — 24,088, 24,089, 24,090, 24,091 (486)
★ 23,902, 23,903, 23,905, 23,911, 23,904 (486)
★ 23,204, - 23,269, (487)
★ 23,270 — 23,322 (488)
★ 23,529 — 23,661 (489)
★ 23,662 — 23,699 (490)
★ 23,712 — 23,804 (491)
★ 24,023 —24,051 (0002)
★ 24,126 —24,239 (0003)
★ 24,266 —24,507 (0004)
★ 24,524— 23,321 (0005)
★ 24,570 — 24,628(0006)
★ 23,810 —23,877(0007)
★ 23,879— 24,007 (0008)
★ 24,686 —24,848 (0009)
★ 24,783 —24,843 (0010)
★ 24,858 —25,000 (0011)
★ 97 - 01 - 0031 — 97 - 01 - 0070 (0012)
★ 97 - 01 - 0157 — 97 - 01 - 0160 (0013)
★ 97 - 01 - 0187 — 97 - 01 - 0271 (0014)
★ 97 - 01 - 0281 — 97 - 01 - 0313 (0015)
★ 97 - 01 - 0315 — 97 - 01 - 0340 (0016)
★ 97 - 01 - 0364 — 97 - 01 - 0454 (0017)
★ 24,776 —24,779(0018)
★ 97 - 01 - 0468 — 97 - 01 - 0652 (0019)
★ 97 - 01 - 0669 — 97 - 01 - 0779 (0020)
★ 97 - 01 - 0789 — 97 - 01 - 0863 (0021)
★ 97-01-0313 — 97-01-0900 — 97-01-1,080 (0022)
★ 97-01-1,092 — 97-01-1,217 (0023)
★ 97-01-1,262 — 97-01-1,416 (0024)
★ 97-01-1,427 — 97-01-1,525 (0025)
★ 97-01-1,585 — 97-01.1,727 (0026)
★ 24,105, 24,111 24,114, 24,115, 24,116, 1,545A (0028)
★ 23,054, 14,945, 16078, 15,161, 23,127 (0028)
★ 97-01-1,812 — 97-01-1,888 (0029)
★ 97-01-1,926 — 97-01-2,071 (0030)
★ 97-01-1,541 — 97-01-1,553 (0031)
★ 97-01-2,109 — 97-01-2,219 (0032)
★ 97-01-2,326 — 97-01-2,379 (0033)
★ 97-01-2,580 — 97-01-2,395 (0034)
★ 97-01-2,597 — 97-01-2,802 (0035)
★ 97-01-3 — 97-01-3,017 (0036)
★ 23,092, 23,103, 23,078, 23,106 (0037)
★ 97-01-3,039 — 97-01-3,051 (0038)
★ 97-01-3,053 — 97-01-3,055 (0039)
★ 97-01-3072 — 97-01-3,210 (0040)
★ 97-01-3,305 — 97-01-3,614 (0043)
★ 97-01-3,643 97-01-3,838 (0044)
★ 10,653, 11,667, 12,327 14,041 14,175 14,671 (0045)
★ 15,045, 15,448, 16,275, (0045)
★ 97-01-3,886 — 97-01-4,031 (0046)
★ 97-01-4,052 — 97-01-4,276 (0047)
★ 97-01-4,304 — 97-01-4,499 (0048)
★ 97-02-4,513 — 97-02-4,613 (0049)
★ 97-02-5,026 — 97-02-5,096 (0050)
★ 97-02-5,124 — 97-02-5,249 (0051)
★ 97-02-5,394 — 97-02-5,547 (0052)
★ 97-02-4.664 — 97-02-4,838 (0053)
★ 97-02-5,659 — 97-02-5,634 (0054)

## கப்பல்

★ 22,027 — 22,243 (521)
★ 24,068 — 24,291 (521)
★ 22,247 — 22,265 (409)
★ 22,266 — 22,286 (410)
★ 22,287 — 22,317 (411)
★ 22,319 — 22,353 (415)
★ 22,354 — 22,379 (416)
★ 22,380 — 22,431 (417)
★ 22,435 — 22,458 (421)
★ 22,460 — 22,497 (422)
★ 22,498 — 22,529 (423)
★ 22,530 — 22,562 (425)
★ 22,563 — 22,593 (426)
★ 22,594 — 22,620 (427)
★ 22,621 — 22,660 (430)
★ 22,661 — 22,687 (437)
★ 22,688 — 22,706 (438)
★ 22,708 — 22,739 (439)
★ 22,740 — 22,747 (440)
★ 22,753 — 22,787 (442)
★ 22,788 — 22,821 (443)
★ 22,822 — 22,829 (444)
★ 22,994 — 23,026 (462)
★ 22,962 — 22,993 (463)
★ 22,928 — 22,961 (464)
★ 22,903 — 22,927 (465)
★ 22,869 — 22,879 (466)
★ 22,837 — 22,868 (467)
★ 23,027 — 23,050 (469)
★ 23,051 — 23,075 (470)
★ 23,138 — 23,167 (471)
★ 23,169 — 23,188 (472)
★ 23,250 — 23,273 (474)
★ 23,274 — 23,294 (475)
★ 23,328 — 23,350 (480)
★ 23,351 — 23,371 (481)
★ 23,378 — 23,415 (482)
★ 23,416 — 23,446 (483)
★ 23,447 — 23,473 (484)
★ 23,474 — 23,503 (485)
★ 23,906 — 23,910 (493)
★ 23,195 — 23,214 (494)
★ 23,295 — 23,318 (495)
★ 23,504 — 23,540 (496)
★ 23,541 — 23,569 (697)
★ 23,570 — 23,593 (498)
★ 23,594 — 23,618 (499)
★ 23,619 — 23,643 (500)
★ 23,645 — 23,675 (501)
★ 23,676 — 23,706 (502)
★ 23,708 — 23,736 (503)
★ 23,737 — 23,767 (504)
★ 23,768 — 23,802 (505)
★ 23,812 — 23,829 (510)
★ 23,830 — 23,846 (511)
★ 23,853 — 23,874 (512)
★ 23,875 — 23,927 (513)
★ 23,987 — 24,015 (514)
★ 24,019 — 24,045 (515)
★ 23,928 — 23,957 (516)
★ 23,958 — 23,986 (517)
★ 24,046 — 24,067 (518)
★ 24,292 — 24,694 (522)
★ 24,543 — 25,007 (523)
★ 97-01-0001 — 97-01-0343 (524)
★ 97-01-346 — 97-01-0642 (525)
★ 0646 — 01024 (531)
★ 01025 — 01337 (536)
★ 01339 — 01724 (537)
★ 01725 — 02052 (540)
★ 02053 — 02377 (541)
★ 02378 — 02728 (542)


## 60 ஆம் நாள் நினைவஞ்சலி

### செல்வி ஞானமுத்து தேவராணி

மலர்வு: **17 - 07 - 1953** உதிர்வு: **25 - 12 - 1996**

ஞானப்பிரகாசர் வீதி, மல்வத்தை உடுவிலைப் பிறப்பிடமாகவும், விடத்தல்தீவு மன்னாரைத் தற் காலிக வதிவிடமாகவும் கொண்ட செல்வி ஞானமுத்து தேவராணி 25 - 12 - 96 இல் அகால மரணம் அடைந்ததையிட்டு மானிப்பாய் அந்தோனியார் ஆலயத்தில் இன்று (25 - 02 - 97) செவ்வாய்க்கிழமை திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். அன்று வீட்டில் நடைபெறும் விருந்துபசாரத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களையும் வேண்டுகின்றோம்.

தகவல்:
ஞானமுத்து ஜெபரட்ணம்
(சகோதரர் — கிராம அலுவலர், சங்குவேலி)

ஞானப்பிரகாசர் வீதி,
மல்வத்தை,
உடுவில்.

(45484)

## விற்பனை இலிகிதர் தேவை

யாழ், நகரில் இருக்கும் பிரபல வர்த்தகஸ்தாபனத்துக்கு ஆங்கிலம் எழுத, வாசிக்கத் தெரிந்த அனுபவமுள்ள விற்பனை இலிகிதர் தேவை. கல்வித் தகைமைகள் முன் அனுபவம் போன்ற விவரத்துடன் **01 - 03 - 97** ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

**வி/இல:- 591**
**மே/பா உதயன் யாழ்ப்பாணம்.**

(45477)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள் ஆங்கில ஆசிரியரும் எமது முன்னாள் ஆசிரியை

**திருமதி சிறீரங்கன் செல்வசக்தி**

அவர்களின் அன்புத் தந்தையும், எமது பாடசாலைச் சிறார்களின் சமய ஈடுபாட்டை வளர்ப்பதில் அரும்பணி புரிந்தவருமான

### முருகேசு குமாரவேலு

அவர்களின் திடீர்மறைவை யொட்டித் துயருறும் மனைவி, மக்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
யா/ மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்.

(சி/193)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளியில் அமைந்துள்ள 3½ பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு. இல.5, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (45482)

### விற்பனைக்கு

புத்தம் புதிய, Yamaha PSR 310 Organ, Stand, Pack உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: K.T. Sasitharan, 35/1G.P.S.Rd, (சங்கம் முன்பாக), கல்வியங்காடு. பா நே: 4.30 Pm-6.00 Pm. [45470]

ஜேர்மன் வயலின், ஹார்மோனியம், சுருதிப்பெட்டி, கிற்றார் விற்பனைக்குண்டு. தொடர்பு:- T. கணேசன், 33, பேக்கரி லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (45480)

நல்லநிலையிலுள்ள உருத்திர வீணை, சுருதிப்பெட்டி Suzuki மெலோடியன். நஷனல் கலர் T.V. விற்பனைக்குண்டு. தொடர்பு: தருமநாயகம் 43/11 கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம். (9313)

### தவறிவிட்டது

அச்சுவேலைக்குரிய புளொக் பார்சல் கஸ்தூரியார் வீதியில் காணாமற் போய்விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 'அருண்' புளொக் தயாரிப்பாளரிடம் ஒப்படைக்சவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தியாகராசா (9316)

### மணமகன் தேவை

கிறிஸ்தவ கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, வசதியுள்ள பெற்றோர் தங்கள் அழகிய மகளுக்கு கனடா, ஆஸ்திரேலியா, அல்லது இங்கிலாந்தில் வேலை பார்க்கும் மணமகனை எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: மே/பா இல. 590, 'உதயன்', யாழ்ப்பாணம். [45473]

### பயிற்சிகள்

3ஆம், 4ஆம், 5ஆம் ஆண்டு எல்லாப் பாடப்பயிற்சிகளும் (விடைகளுடன்) பெற்றுக் கொள்ளலாம். ஆண்டு 6 முதல் O/L வரை பயிற்சிகள் 1-3-97 இல் இருந்து பெறலாம். Bond Institutes, யாழ்ப்பாணம். [45455]

### மணப்பெண் தேவை

கனடாவில் தொழில் புரியும், படித்த, இந்து, கௌரவ குடும்ப, 38 வயது மணமகனுக்கு, படித்த, அழகிய மணப்பெண் தேவை. ஸ்பொன்ஸர் மூலம் பெண் அழைக்கப்படுவார். சாதகம், பிறந்த நேர விவரத்துடன் விண்ணப்பிக்கவும். த. இராமலிங்கம் இல. 109/A பலாலி றோட் - 6 ஆம் ஒழுங்கை, கந்தர்மடம் யாழ்ப்பாணம். [45476]

## ஆசிரியை தேவை

கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தில், மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் **பாலர் பாடசாலைக்கு பயிற்சி பெற்ற ஆசிரியை தேவை** சுயவிவரத்துடன் 05 – 03 – 97 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

செயலாளர்
ம. கி. மு. சங்கம்
கோண்டாவில் வடக்கு.
(45475)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### சோமசுந்தரம் இந்திராதேவி

(பொது மருத்துவ மாது)
எழுவைதீவு.

தோற்றம்: **09 - 11 - 1944**
மறைவு; **26 - 01 - 1997**

அழகு முகம் பொன் சிரிப்பு இனிய குரல்
அரவணைத்தே வரவேற்கும் தூய நெஞ்சம்
பழகுவதற்கு அரிய துணை என்றே - மக்கள்
பாராட்ட நீ சேவை செய்தாய் அம்மா!
வளமிகுந்த வாழ்வெமக்கு கிடைக்கு
முன்னம் காலன்
வஞ்சனையே செய்திட்டான் அன்புத்தாயே -நான்
இருளடர்ந்த காட்டிற்குள் ஏங்கி நிற்க
இறைவனடி சேந்தாயே தெய்வத் தாயே

அன்புத் தாயின் ஆத்ம சாந்திக்காக அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மலர் வளையங்கள் வைத்தவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து உதவிகள் நல்கிய உறவினர்கள், நண்பர்கள் அயலவர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றி.

பிரிவால் துயருறும்:
**மகன் அஜந்தா.**

2 ஆம் வட்டாரம்,
எழுவைதீவு,
(45422)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### விசுவலிங்கம் ஆறுமுகம்

(சரசாலை தெற்கு)

தோற்றம்: **27–03–1918**
மறைவு: **27–01–1997**

அன்பு, அடக்கம், கல்வி, அறிவு, இரக்கம் இவை யாவற்றுக்கும் இலக்கணமாக வாழ்ந்து பாசத்தின் பிணைப்பால் எம்மை உருவாக்கி பிள்ளைகள் யாம் வாழ பெரும்பாடுபட்டீர். நாம் வாழும் நேரத்தில் எம்கண்களை ஈரமாக்கி கண்மூடிச் சென்றீரோ! முப்பத்தொரு நாள் ஓடி மறைந்திடினும் உங்கள் நினைவு எம்மை விட்டு நீங்காது. அன்னாரின் ஆத்ம சாந்திக்கிரியை (26 - 2 - 97) புதன்கிழமை நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஆத்ம சாந்தியின் பொருட்டு பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேடுண்கிறோம்.

**மனைவி, மக்கள், மருமக்கள்.**

இ. சண்முகலிங்கம்
அச்சுவேலி தெற்கு.
(அச்சுவேலி வைத்தியசாலைக்கு அண்மையில்)
அச்சுவேலி.
(45463)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 05 — 04 — 1968



இறப்பு: 11 — 03 — 1993

### திருமதி சந்திரதாஸ் அமிர்தலக்ஷ்மி

**(தங்கக்கிளி)**

ஆண்டுகள் நான்கொரு நாற்பதுதான் சென்றிடினும்
அன்புடனே அறிவும், பண்புடனே படிப்பும்,
உறவோடு உரிமையும், உயிருடனே இணைந்து
விட்டதெய்வமே அம்மா!
எப்படி மறப்போம் அம்மா உந்தன் நினைவுதனை
விட்டகலா நெஞ்சுடனே வாழுகின்றோம் அம்மா.

பிரிவால் துயருறும்:
**கணவன், பிள்ளைகள்.**

இன்பருட்டி,
அல்வாய் வடக்கு,
பருத்தித்துறை.
(45481)

## மக்கள் சேவையில் அறவழி

மக்கள் பணியில் தனது 18 வருட சேவையினை நிறைவு செய்யும் அறவழிப் போராட்டக்குழு தான் கடந்து வந்த பாதையினை மீண்டும் ஒரு முறை மக்கள் முன் மீட்டிசைக்கின்றது.

தமிழ் மக்கள் மத்தியில் கடந்த காலத்தில் புரையோடிப்போயிருந்த சாதிப்பிரச்சினை, சீதனப்பிரச்சினை, தொழில் சமத்துவமின்மைப் பிரச்சினை, சமூக ஏற்றத்தாழ்வுப் பிரச்சினை போன்ற பல்வேறு பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றினை சமூகத்தில் இருந்து அகற்றுவதன் மூலம் புதிய எழுச்சி மிக்க சமூக அமைப்பு ஏற்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு மக்களால் மக்களுக்காக எனும் அடிப்படைத்தத்துவத்தினை அடியொற்றி அறவழி ரீதியான நேரடிப் போராட்டத்தினை நடத்தும் மனப்பயிற்சியினை பெற்ற இளைஞர்களினால் சமூகத்தின் நன்மை கருதித் தோற்றுவிக்கப்பட்டதே அறவழிப் போராட்டக்குழு ஆகும்.

ஆரம்ப காலத்தில் சமூக ஒடுக்குமுறைகளுக்கு எதிராக அறவழி ரீதியான போராட்ட உணர்வுடன் கறுப்புப்பட்டி, சமத்துவவழிபாடு, சீதனஒழிப்பு, தொழில் சமத்துவம் பேணல் போன்ற பல்வேறு அமைதிவழி நேரடிப்போராட்டங்களையும் அதற்கான நியாயமான காரணங்களையும் வெளிப்படுத்தியதன் மூலம் கடந்த காலத்தமிழ் சமுதாயத்தின் மத்தியில் பாரிய விழிப்புணர்வுத் தாக்கத்தினை ஏற்படுத்தி பல்வேறு சமூகப்பிரச்சினைகளுக்கு நீதியான தீர்வு ஏற்பட உழைத்து வெற்றிகள் பலகண்டு சேவையாற்றி வந்தகுழு 1983 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரங்கள் காரணமாகப் பாதிக்கப்பட்டு அல்லலுற்று அடைக்கலம் தேடிஓடி வந்த தமிழ்மக்களை அரவணைத்து ஆதரித்து குடியிருக்க நிலம் வழங்கி, குடிசைகள் அமைத்து குடியேற்றிய பணிகளுடன் இதுவரைகாலமும் போராட்ட உணர்வுடன் செயற்பட்டு வந்த நிறுவனம் விரிவுபடுத்தப்பட்ட மனிதநேயப்பணிகளை ஆற்றக் கூடிய சமூக சேவை நிறுவனமாகத் தன்னைப் பதிவு செய்து கொண்டு ஓர் அரசு சார்பற்ற நிறுவனத்துக்குரிய சகல நடைமுறைகளையும் செயற்பாட்டினையும் மேற்கொண்டு வருகின்றது.

இந்தவகையில், முன்பள்ளிக்கல்வி, சமூகமேம்பாடு, விவசாயம், அபிவிருத்தி, புனர்வாழ்வு சுயதொழில் பயிற்சி, நூலகசேவை போன்ற பல்வேறு பட்டதுறைகள் மூலம் கடந்த பல வருடகாலமாக மக்களுக்குச் சேவையாற்றும் அறவழிக்குழு கடந்த சில வருடங்களாகப் பல்வேறு இழப்புக்களையும் நட்டங்களையும், துன்பங்களையும் சந்தித்தவேளையிலும் தொடர்ந்தும் மக்களுக்குச் சேவையாற்றுவதில் முனைப்புடன் செயற்பட திடசித்தம் கொண்டு உள்ளது. இந்த நல்ல வேளையில் அறவழியின் பணிகள் பெருக அயராது உழைத்தஅறவழி சேவையாளர்கள், தொண்டர்கள், ஆதரவாளர்கள், நன்கொடையாளர்கள், உள்ளூர்/வெளியூர் அரச சார்பற்ற நிறுவனங்கள், அரச நிறுவனங்கள் உட்பட அனைவருக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்வதுடன் தொடர்ந்தும் எமது நிறுவன பணிகள் வளர உதவுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

**வீ. நீ. தங்கவேல்,**
**தலைவர்,**
**அறவழி.**

தலைமைச் செயலகம்,
த. பெ. இல. 02,
கண்டிசாலை,
கைதடி – நுணாவில்,
சாவகச்சேரி.
(சி/184)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ராஜதந்திரிகளின் அச்சம்

கொழும்பு நகரின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து பொலீஸ் மா அதிபர் ரி. டபிள்யு ராஜகுரு வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு அண்மையில் விளக்கியிருக்கிறார்.

இவ்வாறு கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு நகரின் பாதுகாப்புக்குறித்து விளக்குவதற்கு ஏற்பட்ட அவசியம் என்ன? நகரத்தின் பாதுகாப்புக் குறித்து வெளிநாட்டு ராஜதந்திரிகள் மத்தியில் அச்சம் இருந்தமையே.

கொழும்பு தலைநகருக்குள் விடுதலைப்புலிகள் ஊடுருவி இருப்பதாக கொழும்புப் பத்திரிகைகளில் அடிக்கடி செய்திகள் வெளிவருகின்றன. இச் செய்திகளை அங்குள்ள பத்திரிகைகளுக்கு வழங்குபவர்கள் அநேகமாகப் பொலீஸாரே.

அந்தத் தகவல்கள் உண்மையானவையோ அல்லது தாமும் விழிப்பாக இருக்கிறார்கள், தமது கடமையைத் திறம்படச் செய்கிறார்கள் என்று மேலிடத்துக்குக் காட்டுவதற்காக பொலீஸ் மற்றும் பாதுகாப்புத்தரப்பினர் அவிழ்த்துவிடும் புனைகதைகளோ என்பது தெரியாது; இரண்டுமாக இருக்கலாம்.

விடுதலைப் புலிகள் கொழும்பு நகரைத் தாக்குவதற்கு திட்டமிடமாட்டார்கள் என்று சொல்ல முடியாது. அதனால் கொழும்பில் உள்ள ராஜதந்திரிகள் அஞ்சுவதில் அர்த்தமில்லை என்றும் சொல்ல முடியாது.

தெற்கில் அடுத்த மாதத்தில் நிகழவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டும் நகரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் உண்டாகலாம் என்றும் ராஜதந்திரிகள் எண்ணியிருக்கலாம்.

வேட்பாளர் நியமனப்பத்திரங்கள் தாக்கலாகும் காலத்திலேயே இரத்தினபுரியில் தேர்தல் வன்செயல்கள் ஆரம்பமாகிவிட்டன. அரசியல் படுகொலை நடந்தது. குழப்ப நிலை தோன்றியது. இத்தகைய நிலை தொடராது என்று திட்டவட்டமாகச் சொல்லக்கூடிய சூழ்நிலை தென்படவில்லை. அதற்கு மாறான பின்புலமே உருவாகி வருகிறது.

நாலந்தா எல்லாவெலவின் கொலையை அரசாங்கக் கட்சி தனது தேர்தல் நயத்துக்கு இயன்றவரை உச்சவரம்புக்குப் பயன்படுத்தி வருவது தெட்டத்தெளிவாகத் தெரிகிறது. தமது கட்சி மக்களுக்குச் செய்த நன்மைகள் என்ன என்று கூறுவதைவிட, ஐக்கிய தேசியக் கட்சி செய்த தீமைகள் எவை என்பதைப் பெரிதுபடுத்திக் கூறுவதிலேயே அரசாங்கக் கட்சிப் பிரமுகர்கள் கூடிய கவனம் எடுக்கிறார்கள்.

அதே பாணியை ஐக்கிய தேசியக் கட்சியும் பின்பற்றும். அப்போது தேர்தல் காலக்குழப்பங்களும் வன்செயல்களும் கொழும்புக்கும் விஸ்தரிக்கலாம்.

ஆகையால் கொழும்பின் பாதுகாப்புக் குறித்து அங்குள்ள ராஜதந்திரிகள் அச்சப்படுவதற்குக் காரணமுண்டு.

ஆனால் பொலீஸ் மா அதிபர் அளித்துள்ள விளக்கமும் விவரமும், தயாரித்துள்ள திட்டங்களும் நகரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமா என்பதனைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# கணேசலிங்கத்தின் ராஜினாமாவை ஏற்க ஐ. தே. க. செயற்குழு மறுப்பு

## கணக்கு விவரங்களைக் கோருகிறது

கொழும்பு, பெப் 25

ஐ. தே. க. பொருளாளர் பதவியில் இருந்து விலகுவதாக கொழும்பு முன்னாள் மேயர் கே. கணேசலிங்கம் சமர்ப்பித்த இராஜினாமாக் கடிதத்தை ஏற்க ஐ. தே. க. செயற்குழு மறுத்து விட்டது.

கட்சியின் கணக்குகளை சரிசெய்து அவர் ஒப்படைத்தால் மட்டுமே அவரது ராஜினாமாவை ஏற்க முடியும் என்று செயற்குழு முடிவு தெரிவித்துள்ளது.

கட்சியிலிருந்து இராஜினாமாச் செய்ய முன் பொறுப்புமிக்க பதவிகளில் ஒன்றான பொருளாளர் பதவியையும் கணேசலிங்கம் வகித்து வந்தது தெரிந்ததே.

[இ-3-150]

## இரவு வேளை துப்பாக்கிச் சூடு

தென்மராட்சி, பெப். 25

வடமராட்சி கிழக்கு வத்திராயன் கடற்கரைப் பகுதியில் இருந்து கடந்த சில தினங்களாக இரவு நேரத்தில் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்படுகின்றன. இதனால் கரையோரப் பகுதி குடியிருப்பைச் சேர்ந்த மக்கள் பீதியால் இரவில் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று தங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-117)

## லண்டனில் கருத்தரங்கு

கொழும்பு, பெப். 25

இருபத்தோராம் நூற்றாண்டில் கலவரங்களையும் யுத்தங்களையும் தவிர்க்க உறுதியான தீர்வைக் கட்டி எழுப்புவது என்ற தொனிப் பொருளிலான கருத்தரங்கு ஒன்று லண்டனில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் பங்குபற்றுவதற்காக புளொட் இயக்கத்தின் தலைவர் திரு. சித்தார்த்தன் லண்டனுக்குச் சென்றுள்ளார். (ஐ)

## அவசரகாலச் சட்டத்தின் கீழ் குற்றம்

# சட்டமா அதிபரின் அனுமதியின்றி விடுதலை செய்ய முடியாது

அவசர காலச் சட்ட விதிகளின் கீழ் குற்றம் புரிந்ததாகக் கருதப்படும் ஒரு சந்தேக நபரை அல்லது குற்றவாளியைச் சட்ட மா அதிபரின் எழுத்து மூலமான சம்மதம் இல்லாமல் வேறு எந்தச் சட்டத்தின் கீழும் மஜிஸ்திரேட் நீதிவான் விடுதலை செய்ய முடியாது என்று பாதுகாப்பு அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

எந்தவொரு நபரும் இத்தகைய சூழ்நிலையில் கைது செய்யப்பட்டால் அது பற்றி மாஜிஸ்திரேட் நீதிவான் சகல காரணங்களையும் விளக்கி சட்டமா அதிபரின் கவனத்துக்கு உடனடியாகக் கொண்டு வரவேண்டும்.

சம்பந்தப்பட்ட நபரை சட்டமா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் பிணையில் செல்லவும் அனுமதிக்க முடியாது.

அதே சமயம் 3 மாதங்களுக்கு மேலாக ஒருவர் விசாரணை இன்றித் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தால் விசேட ஏற்பாட்டுக்கு அமைய மேன்முறையீட்டு நீதிமன்றம் அவரை விடுதலை செய்ய முடியும்.

இப்படிப் பாதுகாப்பு அமைச்சு மேலும் சுட்டிக் காட்டியுள்ளது. (இ-3)

## சூத்திரதாரி இலங்கையராம்

கொழும்பு, பெப். 25

ஒல்லாந்துக்குள் சட்டவிரோதமாக விமானம் மூலம் பிரவேசித்த 173 இலங்கையர்களும் இலங்கைப் பிரமுகர் ஒருவராலேயே அனுப்பி வைக்கப்பட்டனர் என்று ஒல்லாந்தில் உள்ள இலங்கைத் தூதரக ஆலோசகர் அறிவித்துள்ளார். ஒல்லாந்து அதிகாரிகளும் இதனை ஊர்ஜிதப்படுத்தியுள்ளனர்.

இந்த இலங்கைப் பிரமுகரது பெயரைத் தாம் விரைவில் இலங்கைக்கு அறிவிக்கப் போவதாக ஒல்லாந்து அதிகாரிகள் தெரிவித்தனர்.

(ஐ-5)

## விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், பெப். 25

கொடிகாமத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றவரான ரவீந்திரன் விக்னேஸ்வரன் (வயது 22) என்ற இளைஞரே காயமடைந்தவராவார். இவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (ஐ-15)

# அகதிகள் படகு விபத்துக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும்

## ஜனாதிபதிக்கு கூட்டணித் தலைவர் கடிதம்

கொழும்பு, பெப். 25

''வன்னி, வவுனியா பகுதிகளில் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகள்தான் நாச்சிக்குடாவில் அகதிகள் படகு விபத்து ஏற்படக் காரணம். இதற்கான பொறுப்பை அரசாங்கமே ஏற்கவேண்டும்.''

—மேற்கண்டவாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

நாச்சிக்குடா படகு விபத்தில் 130 தமிழ் அகதிகள் கொல்லப்பட்டது தொடர்பாக அவர் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''வவுனியா மற்றும் வன்னிப்பகுதிகளில் அரசாங்கம் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகள்தான் அகதிகள் தமிழகத்துக்குச் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளமைக்குக் காரணம்.

''இப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்கள் வவுனியாவில் முகாம்களில் தடுத்து வைத்து இன்னல்களுக்கு உள்ளாக்கப்படுவதும் மக்கள் நாட்டை விட்டு ஓடுவதற்கு ஒரு காரணமாகும்.

''நாச்சிக்குடா படகு விபத்தில் மக்கள் இறந்தமைக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும்.

''படைகளின் தாக்குதல்களுக்கு அஞ்சிச் சென்ற இந்த மக்களுக்கு ஏற்பட்ட கதி இனிமேலும் இடம்பெற அனுமதிக்கக்கூடாது.

''இடம்பெயர்ந்து வவுனியா வரும் அகதிகள் விடயத்தில் அர்த்தமுள்ள நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும்.

''உங்கள் ஆலோசகர்கள் உங்கள் மீது வைத்துள்ள விசுவாசத்தை சந்தேகத்துக்குள்ளாக்குகிறார்கள்.

''அவர்களில் நீங்கள் நம்பிக்கை வைப்பதிலும் பார்க்க பெரும் எண்ணிக்கையான வாக்குகளை வழங்கி உங்களை வெற்றி பெறச் செய்த தமிழ் மக்கள் மீது நம்பிக்கை வையுங்கள்'' — என்று அக்கடிதத்தில் அவர் கேட்டுள்ளார். (உ-3-150)

## வருடாந்த கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 25

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் அடுத்த மாதம் மூன்றாம் திகதி நடைபெறவுள்ளது. (அ)

# பொலீஸ் அதிகாரிகளுக்கு 50 சொகுசு கார்கள் இறக்குமதி!

கொழும்பு, பெப். 25

பொலீஸ் திணைக்களத்தின் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகளுக்காக 50 சொகுசு கார்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 10 ''போர்ட் செற்றிக்'' ரக கார்கள் பொலீஸ் மா அதிபர் உட்பட 9 சிரேஷ்ட பிரதிப் பொலீஸ் மா அதிபர்களுக்கு வழங்கப்படும்.

ஏனைய ''சனி ஜி எல். எக்ஸ்'' ரக கார்கள் சாதாரண பொலீஸ் அதிகாரிகளுக்கும் வழங்கப்படும்.

இதே நேரம் — பொலீஸ் மா அதிபர் உட்பட 10 பிரதிப் பொலீஸ் மா அதிபர்கள் அடுத்த ஆறு மாத காலத்தில் ஓய்வுபெறவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3-150)

# நாலந்தா கொலைக்காக மனம் தளராதீர்கள்!

## கட்சியினருக்கு ரணில் ஆலோசனை

கொழும்பு, பெப். 25

'இரத்தினபுரி மாவட்ட எம்.பி. நாலந்தா எல்லாவெல கொலைச் சம்பவம் ஐ.தே. கட்சிக்கு பின்னடைவுதான். அதற்காகக் கட்சி அங்கத்தவர்கள் தளர்ந்து விடக் கூடாது.'

— மேற்கண்டவாறு ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தமது கட்சியினரைக் கேட்டுக் கொண்டார்.

சப்பிரகமுவ மாகாணத்தில் ஐ.தே.க. சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அந்த மாகாணத்தில் அச்சுறுத்தல் காரணமாக தேர்தலில் இருந்து விலகப் போவதாக அறிவித்த ஐ.தே.க. வேட்பாளர்களும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

நாலந்தா கொலையின் பின்னர், கட்சியில் இருந்த சிலர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதாகவும் ரணில் கூறினார்.

''அரச ஆதரவாளர்கள் மேற்கொண்ட தாக்குதலில் ஐ தே.க. ஆதரவாளர்களின் ஐம்பது கோடி ரூபா சொத்துக்கள் நாசமாகின. அதற்கு உரிய நஷ்டஈடு வழங்குமாறு அரசைக் கோரவிருக்கிறேன்'' — என்றும் ரணில் கூறினார்.

(உ-3-150)

# ரட்ணதிலகாவின் மகனும் சரணடைந்தார்

கொழும்பு, பெப். 25

நாலந்தா எல்லாவெல கொலை தொடர்பாகத் தேடப்பட்டு வந்த மற்றொரு சந்தேக நபரான விராச் ரட்ணதிலகா நேற்று கோட்டை நீதிவான் முன்னிலையில் பொலீஸில் சரணடைந்தார்.

இவர், இக் கொலைச் சம்பவத்தின் முக்கிய சந்தேக நபரான முன்னாள் இரத்தினபுரி மாநகர மேயர் மகிந்த ரட்ண திலகாவின் மகனாவார்.

இவரை எதிர்வரும் 7ஆம் திகதிவரை தடுப்புக்காவலில் வைக்குமாறும், அன்றையதினம் அவரை இரத்தினபுரி நீதிமன்றில் ஆஜராக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (ஐ)

## நாளை

மாசி 15

புதன்கிழமை

திதி: சதுர்த்தி முன்இரவு 10-59 வரை.

நட்சத்திரம்: சித்திரை முழுநாளும்

ராகுகாலம்: 12.29-1.59

சுபநேரம்: 4 59-6.29

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## மன்னாருக்கு செய்தியாளர்கள் சென்றனர்

கொழும்பு, பெப். 25

'எடிபல' இராணுவ நடவடிக்கை மூலம் வவுனியா - மன்னார் வீதியைப் படையினர் கைப்பற்றிய பின்னர் உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்தியாளர்கள் அங்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அவர்கள் அங்குள்ள நிலைமைகளை நேரடியாகப் பார்வையிடவும் படங்களை எடுக்கவும் அனுமதிக்கப்பட்டனர்.

(ஐ-3)

## குடியிருப்பின் நடுவே மதுக்கடைகள்

குருநகர், பெப். 25

குருநகர் பகுதியில் மக்கள் செறிந்து வாழும் குடியிருப்புப் பகுதிகளில் மதுபானங்கள் விற்கும் சிறிய கடைகள் இயங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சில இடங்களில் மதுபோதையில் ரகளை புரிவோரின் அட்டகாசங்களும் இடம்பெறுவதாக இப்பகுதி மக்கள் பலர் குறைப்பட்டுக் கொள்கின்றனர். (ஐ-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்த அவலங்களைச் சித்திரிக்கும் 'ரெலி' நாடகம் நகரில் ஒளிப்பதிவு

யாழ்ப்பாணம், பெப். 25

யுத்தத்தால் மக்கள் குறிப்பாக வடக்கு — கிழக்கு மக்கள், அனுபவிக்கும் அவலங்களையும் துன்பங்களையும் சித்திரிக்கும் சிங்களத் தொலைக்காட்சி நாடகம் ஒன்றின் முக்கிய காட்சிகள் நேற்று யாழ். நகரின் பல இடங்களிலும் ஒளிப்பதிவு செய்யப்பட்டன.

யுத்த காலத்தில் தமிழ் மக்கள் அடைந்த இன்னல்களைச் சித்திரிப்பதே இந்தத் தொலைக்காட்சி நாடகத்தின் முக்கிய நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டது. யுத்தம் வேண்டாம்; சமாதானமே தேவை என்பதே நாடகத்தின் தொனிப்பொருளாகும்.

ஸ்ரீலங்கா இராணுவம், இந்திய இராணுவம், ஆயுதக் குழுக்கள் ஆகியவற்றின் இராணுவ பலம் மேலோங்கி இருந்த காலங்களில் தமிழ் மக்கள் நடத்திய அவல வாழ்க்கையையும், யுத்தத்தினால் அவர்களின் வாழ்க்கையில் உண்டான மாற்றங்களையும் சிரமங்களையும் வெளிக்கொணரும் விதத்திலேயே இந்த நாடகம் அமைகிறது.

யாழ். ஆஸ்பத்திரி, முற்றவெளி, பெரியகடைப் பகுதி மற்றும் சில முக்கிய வீதிகளில் நேற்று காட்சிகள் பதிவுசெய்யப்பட்டன.

நாடகக் குழுவில் 35 பேர் அங்கம் வகிக்கின்றனர். இவர்களில் நடிகர்கள் 22 பேர். கடற்படையினர் 10 பேரும் இந்திய இராணுவத்தின் பாத்திரங்களை ஏற்று நடித்தனர். நேற்று ஒளிப்பதிவு செய்யப்பட்ட காட்சிகளில் யாழ்ப்பாண மக்களும் நடித்துக்கொள்ளச் சேர்க்கப்பட்டனர்.

நாடகக் குழுவினருடன் கொழும்புப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விரிவுரையாளர் டாக்டர் பெர்னாண்டோவும், மொழிபெயர்ப்பாளராக பீற்றர் தேவநாயகமும் வந்துள்ளனர்.

பல காட்சிகளில் யாழ்ப்பாணத்தில் சேவையில் உள்ள வாகனங்களும் பயன்படுத்தப்பட்டன.

இந்தத் தொலைக்காட்சி நாடகத்துக்கான கதையை பிரபல சிங்கள நாடக எழுத்தாளர் சுகதபால டி சில்வா எழுதியுள்ளார் இயக்குநராக சுதத் றோஹண பணியாற்றுகிறார். ''ரொய்சி ரெலிஸ்ரார்'' நிறுவனத்தார் நாடகத்தைத் தயாரிக்கின்றார்கள்.

இந்த நாடகம் மே அல்லது ஜூன் மாதத்தில் ரூபவாஹினியில் ஒளிபரப்பப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ-15)

## இந்தியப் படை வந்து விட்டதாக வதந்தி

யாழ்ப்பாணத்துக்கு மீண்டும் இந்தியப் படையினர் வந்து விட்டனர் என்ற வதந்தி வடமராட்சி, தென்மராட்சி உட்பட குடாநாடு முழுவதிலும் பரவியது.

நகரில் நேற்று ஒளிப்பதிவு செய்யப்பட்ட காட்சிகள் சிலவற்றில் இலங்கைக் கடற்படையினர் பத்துப் பேர் இந்திய இராணுவத்தின் பாத்திரங்களை ஏற்று நடித்தனர்.

அவற்றைப் பார்த்த மக்கள் தத்தமது பகுதிகளுக்குச் சென்று, கண்டவர்கள் தெரிந்தவர்களுக்கு எல்லாம் இந்திய அமைதிப் படை மீண்டும் வந்து விட்டதாகக் கதை சொன்னார்கள்.

இந்திய அமைதிப் படையினரின் பாத்திரங்களை ஏற்றவர்கள் அவற்றுக்கான வேடங்களுடன் நகரில் திரிந்தனர். (அ-15)

## வடக்கில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மாலை ஆனைக்கோட்டைப் பகுதியில் மோதல்கள் இடம்பெற்றன.

எனினும் இந்த மோதல்களினால் ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை.

இதற்கிடையில் —

கடந்த சனியன்று காலை 9.30 மணியளவில் அல்வாய் நாவலடியில் இருந்து வியாபாரிமூலை நோக்கி சிவில் உடையில் சென்று கொண்டிருந்த இராணுவத்தினர் மீது வியாபாரிமூலை கலைமகள் வாசிகசாலையடியில் வைத்து புலிகள் தாக்குதல் நடத்தியதாகவும் —

அதில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-135)

## விமானப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைகளில் பல முக்கிய தகவல்கள் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும் —

அந்தப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.

இதனால் அரசுக்கு பல கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

1995 ஏப்ரல் 28 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் 'அவ்ரோ' விமானத்தை இழந்தது தொடக்கம் கடந்த வெள்ளி வரை 13 வானூர்திகளை விமானப்படை இழந்துள்ளது.

இதற்கிடையில் —

கடந்த வெள்ளிக்கிழமை இரத்மலானை விமான நிலையத்தில் விபத்துக்குள்ளான 'அன்ரனோவ் 32' விமானத்தின் கறுப்புப் பெட்டி நேற்று உக்ரைனுக்கு அனுப்பப்படவிருந்ததாக 'த ஐலண்ட்' பத்திரிகை நேற்று தெரிவித்தது.

விமானம் விபத்துக்குள்ளான சமயம் அதில் ரஷ்ய நாட்டு விமானியும், ரஷ்ய 'பிளைட் என்ஜினியர்' ஒருவரும் இருந்துள்ளனர்.

விமானம் விபத்துக்குள்ளாவதற்கு முன்னர் விமானிக்கும், கட்டுப்பாட்டு நிலையத்துக்கும் இடையில் நடந்த உரையாடலைப் பதிவு செய்த ஒலிப்பதிவு நாடா பரீட்சிக்கப்பட்டது. ஆனால் அதில் இருந்து விபத்துக்கான முக்கிய தடயங்கள் எதையும் பெற முடியவில்லை — என்று அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்தது (உ-3-150)

## அனுராவுக்கு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புரையை விடுத்துள்ளது.

இதேவேளை —

அனுரா பண்டாரநாயக்காவின் உயிருக்கு விடுக்கப்பட்டிருக்கும் அச்சுறுத்தல் குறித்து முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக உள்ள உயர் பொலீஸ் அதிகாரிகள் குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## உலகக்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தகுதிகாண் ஆட்டத்தை கொழும்பில்நடத்துவதில்லை என்ற தீர்மானத்தை மாற்றும்படி வெளிவிவகார அமைச்சுபோட்டிஏற்பாட்டுக் குழுவைக் கேட்டுள்ளது,

இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை கிராமிய அபிவிருத்தி அமைச்சர் எஸ். பிஸநாயக்காவினதும் —

இலங்கை றகர் சங்கத்தினதும் வேண்டுகோளின் பேரில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்த விவகாரத்தில் தலையிட்டிருக்கிறார் என்று இலங்கை வானொலி தெரிவித்தது.

இந்த விவகாரம் தொடர்பாக லக்ஷ்மன் கதிர்காமர் சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெயக்குமாருடன் தொடர்புகொண்டு, கொழும்பில் இப்போட்டியை நடத்துமாறு சிங்கப்பூர் றகர் சங்கத்தை வலியுறுத்துமாறு கேட்டுள்ளார்.

போட்டியில் கலந்துகொள்ளும் விளையாட்டு வீரர்களின் பாதுகாப்பை உத்தரவாதப் படுத்த இலங்கை அரசு சகல நடவடிக்கைகளையும் எடுக்கும் என்றும் அமைச்சர் கதிர்காமர் உறுதியளித்தார்.

உலக றகர் சங்கத்தின் தலைவருக்கும் இது தொடர்பான முறைப்பாடு ஒன்றை வெளிவிவகார அமைச்சு அனுப்பிவைத்துள்ளது.

இச்சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த 15 ஆம் திகதி பாங்கொக்கில் நடந்த முதலாவது தகுதிகாண் ஆட்டத்தில் தாய்லாந்து அணியை இலங்கை அணி 30 – 15 என்ற புள்ளி வித்தியாசத்தில் வெற்றி கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (உ-ஐ)

## ஆயுதங்கள் மீட்பு

கொழும்பு, பெப். 25

வடமேல் மாகாணத்தைச் சேர்ந்த முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஒருவரின் வீட்டில் இருந்து பெருமளவு ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

சிலாபம் சிங்கப்பூர் வீதியில் உள்ள இவரது வீட்டை பொலீஸாரும், இராணுவத்தினரும் கூட்டாக சோதனையிட்ட சமயம் இந்த ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. (ஐ)

## ஐ. நா தூதரக அபிவிருத்தி திட்டங்கள்

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் இவ்வாண்டுக்கான சிறிய அளவிலான செயற்திட்டங்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் செயற்படுத்தப்பட இருப்பதாக அந்த அமைப்பின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த ஆண்டுக்கான திட்டங்கள் அடுத்த மாதம் முடிவதற்குள் பூர்த்தியாக்கப்பட்டபின் புதிய திட்டங்கள் ஏப்ரலில் ஆரம்பிக்கப்படும். (ஐ-3)

## தீர்வுத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேரம் வந்துவிட்டது.

'செல்வாவுடன் பண்டா செய்த ஒப்பந்தம் எப்படித் தூக்கியெறியப்பட்டது? பின்னர் செல்வாவுடன் டட்லி செய்த ஒப்பந்தம் எப்படித் தூக்கியெறியப்பட்டது? அதே போல் நீங்களும் அரசியல் பொதியைத் தூக்கி எறியுங்கள். அதன் மூலம் நீங்கள் பொது மக்களின் விருப்புக்கு மதிப்புக் கொடுத்தவராவீர்கள்.

''இவ்வாறு அரசியல் பொதியைத்தூக்கி எறிந்தால் உங்கள் பெயர் மகாவம்சத்தில் [illegible] வர் பிரஸ்' என்று இடம் பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3-150)

## ஒரிஸா தீவிபத்து
## 300பேரின் நிலைமை இன்னும் கவலைக்கிடம்

ஒரிஸா, பெப் 25

இந்தியாவின் ஒரிஸா மாநிலம் பரிபரா என்ற இடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பெரும் தீ விபத்தில் 500க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர், இவர்களில் 300க்கும் அதிகமானோரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக அஞ்சப்படுகிறது.

இந்த தீ விபத்தில் 200பேர் உயிரிழந்தது தெரிந்ததே.

தீ விபத்துக் குறித்து உயர்மட்ட விசாரணைக்கு ஒரிஸா மாநில அரசு உத்தரவிட்டுள்ளது என மாநில முதல்வர் ஜே. பி. பட்னாயிக் தெரிவித்தார்.

விபத்தில் இறந்த ஒவ்வொருவரின் குடும்பத்திற்கும் கருணைத்தொகையாக 25 ஆயிரம் ரூபா வழங்க மாநில அரசு உத்தரவிட்டுள்ளது. காயமடைந்தவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ துணை மருத்துவக் குழுக்கள் அண்டைமாநிலங்களில் இருந்து விரைகின்றனர்.

5 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் மாநில அளவில் நடந்த சமய மாநாடு ஒன்றில் கலந்து கொண்ட நிகழ்ச்சியின் போது தீ விபத்து ஏற்பட்டது. தீயினால் சூழப்பட்டவர்கள் தப்பி ஓட முயன்றபோது சன நெரிசல் ஏற்பட்டது.

தீ விபத்துக்கான காரணம் சரியாகத் தெரியவில்லை. மின் ஒழுக்குக் காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என ஒரு சாராரும் வாயு சிலிண்டர் வெடித்ததால் இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என மற்றொரு சாராரும் தெரிவிக்கிறார்கள்.

தீயணைப்புப் படையினர் உடன் அனுப்பப்பட்ட போதிலும் அவர்கள் சென்றடைய முன்னரே பந்தல்கள் தீபிடித்து மக்கள் கடுமையான தீக் காயங்களுடன் அப்பகுதியெங்கும் சிதறிக் கிடந்தனர்.

மாநாடு இடம்பெற்ற இடத்தில் 2 தீயணைக்கும் வாகனங்கள் நின்று கொண்டிருந்ததாகவும் தீ விபத்து ஏற்பட்ட போது அவற்றை இயக்க எவரும் இல்லை என்றும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்களை மேற்கோள் காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன, (இ-10)

## பொதுமக்களின் கவனத்துக்கு அவசரகாலச் சட்ட விதிகள்
### பாதுகாப்பு அமைச்சு அறிக்கை

கொழும்பு, பெப். 25

வெடிமருந்துப் பொருள்கள், துப்பாக்கிகள், தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள், தீங்கு விளைவிக்கும் பொருள்கள் சம்பந்தமாக நடைமுறையில் இருக்கும் அவசரகாலச் சட்ட விதிகளை பாதுகாப்பு அமைச்சு பொதுமக்களின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்துக்கமைய நாட்டின் எந்தவொரு பகுதியிலும் சட்டப்படியான அதிகாரம் இல்லாமல், — நியாயமான காரணம் இல்லாமல் — துப்பாக்கிகள், வெடிக்கக் கூடிய பொருள்கள், தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் அல்லது தீங்கு விளைவிக்கும் பொருள்கள் போன்றவற்றை வைத்திருப்பது அல்லது எடுத்துச் செல்வது தண்டனைக்குரிய குற்றமாகும்.

குற்றம் செய்வதற்காக ஒருவர் இந்த ஆயுதங்களை வைத்திருந்தார் என்று ஒரு பொலீஸ் அதிகாரி அல்லது பாதுகாப்புப் படையைச் சேர்ந்த ஒருவர் கருதினால், அந்த நபரிடம் இருந்து அத்தகைய ஆயுதத்தைக் கைப்பற்ற முடியும்.

இந்த சட்ட விதிகளின் படி குற்றம் இழைத்த ஒருவருக்கு மரண தண்டனை விதிக்கவும், அல்லது 5 வருடத்துக்கு குறையாத 20 வருடங்களுக்கு மேற்படாத காலத்துக்கு சிறைத்தண்டனை விதிக்கவும் ஏற்பாடுகள் உள்ளன.

ஆயுதங்களை வைத்திருக்க ஒருவருக்கு அதிகாரம் இல்லாது இருந்தால், அவரது ஆயுதம் பறிமுதல் செய்யப்படும்.

பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## புலிகளின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளன.

என்றாலும் விமானங்கள் வீழ்ந்ததற்குப் புலிகள் மட்டும் காரணமல்லர்.

நிதி நெருக்கடி காரணமாகவும் ஆளணி பற்றாக் குறை காரணமாகவும் நன்கு பயிற்சி பெற்ற விமான ஓட்டிகளை உருவாக்க முடியாமல் உள்ளது.

கடந்த இரு ஆண்டுகளில் விமானங்கள் விழுந்துநொருங்கியதற்கு முக்கிய காரணம் ஒன்றில் இயந்திரக்கோளாறு அல்லது விமான ஓட்டிகளின் தவறு என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த இழப்புகளை ஈடு செய்ய கோடிக்கணக்கான அமெரிக்க டொலர்களைச் செலவு செய்யவேண்டியிருக்கும்

ஸ்ரீலங்கா விமானப்படையிடம் தற்போது 24 தாக்குதல் விமானங்களும் 25 இராணுவப் போக்குவரத்து விமானங்களும் உள்ளன.

மேலும் பல விமானங்களைக் கொள்வனவு செய்யும் முயற்சிகள் நடைபெற்று வருவதாக பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இருப்பினும் விமானங்களின் இழப்புகளால் ஏற்படும் மனோதைரியப் பாதிப்பை ஈடுசெய்வது என்பது முடியாத காரியமாக அமையலாம். (உ-10)

## ''பிருதுவி'' பரீட்சிப்பு

தரையில் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குச் சென்று தாக்கவல்ல நடுத்தர ஏவுகணையான ''பிருதிவி'' ஒரிஸா மாநிலத்திலுள்ள சண்டிபூரில் இருந்து கடந்த ஞாயிறன்று வெற்றிகரமாகப் பரீட்சிக்கப்பட்டது.

திட்டமிட்டபடி ஞாயிறு காலை 11.55 இக்கு ஏவுகணைச் சோதனை நடைபெற்றது என்றும் இது முழு வெற்றியளித்துள்ளது என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

## சீனத் தலைவரின் உடல் தகனம்

பீஜிங், பெப். 25

மறைந்த சீனத்தலைவரின் உடல் நேற்றுக் காலை மின்சாரக் கல்லறையில் தகனம் செய்யப்பட்டது.

உடல் தகனம் செய்யப்படுவதற்கு முன் அவரது விருப்பத்தின் பேரில் சில உறுப்புக்கள் சீன மருத்துவ விஞ்ஞான கழகத்துக்கு வழங்கப்பட்டன. (ஐ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25 - 02 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org